விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 081 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 26 வெள்ளிக்கிழமை (10.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கை
### அத்தியாவசிய சேவைகள் முடங்கும் அபாயம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 40 தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்துள்ளன.

இதனால் அத்தியாவசிய சேவைகள் முற்றாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கையை முன் 11

## அல்வாயில் 18 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)

அல்வாயில் இரவு நேரம் வீட்டில் ஆட்கள் இல்லாததை சாதகமாக பயன்படுத்தி கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 18 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ள 11

### வவுனியாவில் மர்ம மரணம்
## இரு பிள்ளைகளும் கழுத்து நெரித்து படுகொலை
### உடற்கூற்று அறிக்கையில் தெரிவிப்பு



(வவுனியா)

வவுனியாவில் மர்மமான முறை 11

### நாட்டை கட்டியெழுப்ப
# தலைமைத்துவம் வகிக்கத் தயார்
### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான புதிய பயணத்தில் அனைவரையும் கட்சி, இன, மத பேதமின்றி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

அந்தப் பயணத்துக்கு வழிகாட்டவும் தலைமைத்துவத்தை வழங்கி ஆலோசனைகளை வழங்குவதற்கு தான் தயாராக உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவரையில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நிலாவரை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் சிறுப்பிட்டி மேற்கை சேர்ந்த சுப்பையா இரத்தினசிங்கம் (வயது-63) என்பவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

நிலாவரை பகுதியிலிருந்து சிறுப்பிட்டி நோக்கி துவிச்சக்கரவண்டியில் பயணம் 11

### லங்கா சதொசவில்
## 7 பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் ஏழு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

இன்று முதல் விலைக்குறைப்பு அமுலாகும்.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை ரூ.11 குறைக்கப்பட்டு 11

## யாழ்.மாநகர சபையின் முதல்வர் தெரிவு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு இன்று 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட முதல்வர் இ.ஆனல்ட் இரண்டு முறை வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்தபோதும், அதை நிறைவேற்ற முடியாமல் பதவிவிலகியிருந்தார்.

இந்த நிலையில் புதிய முதல்வர் தெரிவு இன்று நடைபெறவுள்ளது.

திட்டமிட்டபடி 11

### நாட்டின் நிதி நிலைமையையே எடுத்துரைத்தோம்
## தேர்தலுக்கு நிதி வழங்க முடியாது என்று நிதி அமைச்சு கூறவில்லை
### சபையில் நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

தேர்தலுக்கான நிதியை வழங்க முடியாது என்று நிதி அமைச்சு கூறவில்லை. ஆனால் தற்போதைய நிலைமையில் நிதியை வழங்குவதில் 11

## அதிகாரங்களை கொண்டு மக்களின் உரிமையை ஜனாதிபதி மீறுகின்றார்
### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சர்வ அதிகாரங்களை கொண்டு ஜனாதிபதி ரணில் மக்களின் வாக்குரிமையை மீறுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை ஒத்திவைப்பதற்கும் வாழ்க்கைச் செலவை அதிகரிப்பதற்கும் எதிராக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட

## 50 கிலோ கஞ்சா சுழிபுரத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - சவுக்கடி பகுதியில் இருந்து 50 கிலோ எடையுடைய கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த கஞ்சா பொதிகள் சவுக்கடி காட்டுப் பகுதியில் ஓலைகளால் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

### ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2023

காலம் - 11.03.2023 சனிக்கிழமை காலை 9.30 மணி
இடம் - சங்கத் தலைமைக் காரியாலயம்
தலைமை - திரு.செ.ஜெயக்குமார் அவர்கள்(சங்கத் தலைவர்)

அனைத்து அங்கத்தவர்களையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.** (C-6130)

**செயலாளர்**
**க.செல்வச்சந்திரன்**

## கண்ணீர் அஞ்சலி



(C-6132)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் பழைய மாணவ சங்க செயலாளரும் தற்போதைய பழையமாணவ சங்க நம்பிக்கை நிதியச் செயலாளரும், கல்லூரியின் வளர்ச்சிக்காக ஆத்மார்த்த ரீதியாக பங்களிப்பு செய்தவருமாகிய

அமரர் **இராமப்பிள்ளை செல்வநாதன்**

அவர்களின் திடீர் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழையமாணவர் சங்கம் கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 11 - 1954

மறைவு 08 - 03 - 2023

## மனோகரன் சந்திரமலர்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் சந்திரமலர் 08.03.2023 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோகரனின் (பெயின்ரர்) அன்பு மனைவியும், சிந்துஜா (லண்டன்), நரிஸ்ஹரன் (லண்டன்), கிஷாந்தினி (கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் பாச்மிகு தாயாரும், சசிதரன் (லண்டன்), மகிஷா (லண்டன்), மதனபாஸ்கர் (கனடா), றஜீதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரூன், ஹர்னிஸ், கேய்சா, அபிஷா, சைமி, அனிஷ், அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று திருவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 54/4, தனங்காவில், பிள்ளையார் வீதி, திருநெல்வேலி.** (14838)

**தகவல்: குடும்பத்தினர்**
**தொ.பே. 077 418 6641, 077 476 7173**

## கேக்கின் விலை 100 ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)

கேக்கின் விலை 100 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை. அரை இறாத்தல் பாண் மற்றும் பருப்புக்கறியின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவானது 130 ரூபாயிற்கு விற்கப்படும் என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்த விலைக் குறைப்பானது நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. (ம-7)

## குருநகரில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் உரிமம் இன்றி கடல் அட்டை பிடித்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை சுமார் 6.45 மணி அளவில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் படகு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. (ம-7.33)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றும் திருமதி **தேவகி கந்தவனச் செல்வன்** அவர்களின் பாசமிகு மாமியார்

**அமரர்**
**நடராசா புவனேஸ்வரி**

அவர்கள் 08.03.2023 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தோற்றம் 22.07.1936
மறைவு 08.03.2023

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.** (14843)


## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

### 30% விலைக்கழிவில்

- அழகுசாதன பொருட்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- கவரிங் நகைகள்
- சோடினை சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- மணிக்கூட்டு வகைகள்
- கிறீம் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாட்டா வகைகள்
- தையல் உபகரணங்கள்
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்



(14845)

என்பன கொழும்பு விலையில் விற்பனைக்கு உண்டு.

**சரவணபவன் பென்சி கவுஸ்**

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)
077 468 3354


## கண்ணீர் அஞ்சலி



(C-6129)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் வளர்ச்சிக்கு பல்வேறு விதமான உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிய

அமரர் **இராமப்பிள்ளை செல்வநாதன்**

அவர்களின் திடீர் மறைவினையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்**
**(K.C.C.C & K.C.C.C.S.C)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிற்போடப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)


**மக்களின் உரிமைகளை மீறும் வகையில் தேர்தல் பிற்போடப்பட்டால், அதற்கெதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

அதன் மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி விஜித நாணயக்கார நேற்று முன்தினம் கண்டியில்வைத்து இதனை தெரிவித்தார். தேர்தல் என்பது மக்களுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையாகும். அதனை எந்த வகையில் இல்லாது செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

### இந்தியாவின் தடைப்பட்டியலில் இருந்து

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பை நீக்க வேண்டும் எனக்கோரி மனு



(லண்டன்)

இந்தியாவில் சட்டவிரோத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பை நீக்கவேண்டும் என்று கோரி மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்ர குமாரன், இது தொடர்பிலான விண்ணப்பக் கடிதத்தை இந்திய உள்துறை அமைச்சுக்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு முதல் இந்த கோரிக்கையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்து வருவதாகவும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக, இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பணியாற்றுவதில் சாத்தியமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நிபுணரின் அறிவிப்புகளின் அடிப்படையில், தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது எந்த வொரு நிறுவன கட்டமைப்பான அமைப்பையும் எந்தவொரு நிறுவனகட்டமைப்பையும்கொண்டிருக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைக்கான காரணமாக, பிராந்தியத்திற்கும் இந்தியாவின் ஒருங்கிணைப்புக்கும் அச்சுறுத்தல் என்ற விடயத்தை இந்தியா, வலியுறுத்தி வருகின்றபோதும், அதனை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமது மனுவில் மறுத்துள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னெடுக்க இந்தியாவின் ராஜ தந்திர உதவி அவசியம் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கை, இந்திய மக்களின் ஒருமைப்பாட்டையும் பிராந்திய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது.

அத்துடன் தமிழீழமும் இந்தியாவுடன் சிறப்பான உறவை கொண்டிருக்கும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு கடுமையாக பதிலளிக்கும் இலங்கை

## இணை அனுசரணை நாடுகள் கவலை



(கொழும்பு)

இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களிற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது குறித்து மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகள் கரிசனை வெளியிட்டுள்ளன.

அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கான அமைதியான விதத்தில் கருத்து வெளியிடுவதற்கான உரிமைகளை இலங்கை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான எந்த வன்முறை குறித்தும் பொறுப்புக்கூறல் அவசியம் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவித்துள்ள இணை அனுசரணை நாடுகள் மனித உரிமைகளை பாதுகாப்பதில் ஊக்குவிப்பதில் சிவில் சமூகம் முக்கிய பங்கை வகிக்கவேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளன. (நி)

# அதிக புகையை வெளிவிடும் வாகனங்கள் அதிகரிப்பு

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

அதிக புகையை வெளியேற்றும் வாகனங்கள் குறித்து பொதுமக்கள் தெரிவிக்க வேண்டும் என மோட்டார் போக்குவரத்து துறையின் காற்று மாசு பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

070 350 0525 என்ற வாட்ஸ்அப் எண்ணும் அறிவிப்புக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் பேருந்துகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள், அரச வாகனங்கள்மற்றும்பொலிஸ் வாகனங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்தில் கொழும்பு, பெஸ்டியன் மாவத்தையில் தனியார் பேருந்துகளில் புகை பரிசோதனை செய்யப்படுவதாகவும் கடந்த மாத சோதனையில் 40 % இற்கும் அதிகமான பேருந்துகள் புகைப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாகவும் மோட்டார் போக்குவரத்து திணைக்கள பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இங்கு பழுதடையும் வாகனங்கள் 14 நாட்களுக்குள் வேரஹெர தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால், வருவாய் உரிமம் இணைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில் புகையை வெளியிடும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள பணிப்பாளர் நாயகம் அதுபற்றி முறைப்பாடளிக்க 076 350 0525 என்ற வட்ஸப் எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும்

## சுகாதாரப்பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் வேகமாக அதிகரிக்கக்கூடும் என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் பதிவாகும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் - டலஸ்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தான் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு இப்போது ரணில் விக்கிரமசிங்க செய்வதைப் பாருங்கள்.

தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவிக்கின்றார். ரணில் இல்லை என்கின்றார். அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ரணில் இவ்வாறு செய்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் அதிகம். நான் ஜனாதிபதியாகி இருந்தால் இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி நானாகத்தான் இருந்திருப்பேன்.

1994 இல் இருந்து போட்டியிட்ட எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களும் முதலில் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்பது தான். ஆனால், எந்த ஜனாதிபதியும் அதைச் செய்ததில்லை.

நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

ரணில், மகிந்த, மைத்திரி, சந்திரிகா என எல்லோரும் மீண்டும் ஜனாதிபதியாவதற்கு முயற்சிக்க வேண்டாம்.

அடுத்த தலைமுறையிடம் நாட்டை ஒப்படைப்போம். இப்போது நாட்டுக்குத் தேவை புதிய முறைமையாகும் எனத் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2022

**OFFICE OF THE REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES, KILINOCHCHI**

1. The **Chairman, Regional Procurement Committee,** on behalf of the Regional Director of Health Services, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the Renovation work described in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the **Bidding Data and Contract Data** (Section 5).
5. Interested bidders may obtain further information from **address given below in 6,** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 3.00 P.M.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road, Kilinochchi . (T.P: 021 228 5932/021 2285719, Fax: 021 2285931) from 9.00 A.M to 3.00 P.M during the period mentioned in the table** upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
7. Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road, Kilinochchi** on or before on **the date mentioned in the table.** Bid number must be written on the left-hand upper corner of envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Meeting will be held at **Regional Director of Health Services, Kilinochchi, Kandy Road, Kilinochchi** commencing at **on the date mentioned in the table.**
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| CATEGORY 1 | Document Issuing/Purchasing Period | | | From 13.03.2023 until 23.03.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | at 10.00A.M on 16.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | at 10.30 A.M on 23.03.2023 | | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/Se.Hut/Pa/2023 | Construction of Security Hut DH Palai | 1.6 | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 16,800.00 | 25.05.2023 |

| CATEGORY 2 | Document Issuing/Purchasing Period | | | From 13.03.2023 until 23.03.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | at 11.30A.M on 16.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | at 11.30 A.M on 23.03.2023 | | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/wast/jeyapu/2023/01 | **Construction of waste segregation store PMCU Jeyapuram** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 8,800.00 | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP/wast/pirama/2023/02 | **Construction of waste segregation store PMCU Piramanthanaru** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 8,800.00 | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP/wast/kanda/2023/03 | **Construction of waste segregation store PMCU Kandawalai** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 8,800.00 | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP/wast/vanne/2023/03 | **Construction of waste segregation store PMCU Vannerikulam** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 8,800.00 | 25.05.2023 |

| CATEGORY 3 | Document Issuing/Purchasing Period | | | From 13.03.2023 until 23.03.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | at 1.00P.M on 16.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | at 1.00 P.M on 23.03.2023 | | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/Dental/Vadd/2023 | **Improvement of Dental unit &Dispensary at DH Vaddakkachchi** | **1.0** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 10,000.00 | 25.05.2023 |

| CATEGORY 4 | Document Issuing/Purchasing Period | | | From 13.03.2023 until 23.03.2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | at 1.00P.M on 16.03.2023 | | | |
| | Closing and Opening of Bids | | | at 1.00 P.M on 23.03.2023 | | | |
| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
| NP/KOC/RDHS/PSSP/Kitchen/Vadd/2023 | **Construction of Kitchen DH Vaddakkachchi** | **5.8** | 180 Days | C9 ,C8 and C7 (Buildings) | 1,500.00 | 58,000.00 | 22.06.2023 |

| CATEGORY 5 | Document Issuing/Purchasing Period | | From 13.03.2023 until 23.03.2023 | | |
|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | at 2.00P.M on 16.03.2023 | | |
| | Closing and Opening of Bids | | at 2.00 P.M on 23.03.2023 | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Security Amount | Validity Period |
| NP/RDHS/K/PSSP/Dcs.com/202.3 | Desktop Computer | 1.8 | 1,500.00 | 18,600.00 | 25.05.2023 |

**Chairman,**
Regional Procurement Committee,
Office of the Regional Director of Health Services,Kilinochchi
TP- 0212285719, Fax- 0212285931
E mail - rdhskoc@gmail.com,financerdhskoc@gmail.com


(C-6127)


'வடக்கின் பெரும் போர்'ஆரம்பம்

# வலுவான நிலையில் மத்தியின் மைந்தர்கள்

அஜய், விதுசன் ஆகியோரின் அபார துடுப்பாட்டத்தினால் 116வது "வடக்கின் பெரும் போரின்" முதல் நாள் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி வலுவான முன்னிலையை அடைந்துள்ளது.

இலங்கை பாடசாலைகளின் துடுப்பாட்ட சமர் கிரிக்கெட் போட்டிகளில் "வடக்கின் பெரும் போர்" என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி - யாழ்.சென்.ஜோன்ஸ்



கல்லூரி அணிகளுக்கு இடையிலான 3 நாட்களைக் கொண்ட பெருந்துடுப்பாட்ட சமரின் 116 ஆவது அத்தியாயம் நேற்று யாழ்.மத்திய கல்லூரி ஸ்மதானத்தில் அரங்கேறியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது,

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்ஸுக்காக 66 ஓவர்கள் வரை துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 279 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி சார்பில் அஜய்



74 ஓட்டங்களையும் விதுஷன் 71 ஓட்டங்களையும் சன்சஜன் 42 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அபிஷேக் 4 விக்கெட்டுகளையும் கஜகர்ணன், விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங்சில் துடுப்பெடுத்தாடிவரும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 17 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப்



பெற்றிருந்துபோது முதலாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் ஈபென்சர் ஜெய்சில் 16, கிந்துசன் 11 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி சார்பில் அனுசாந் 2, நியூட்டன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர்.

போட்டியின் இரண்டாம்நாள் ஆட்டம் இன்றாகும். யாழ்.மத்திய கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற ஓட்ட எண்ணிக்கையை சமன் செய்ய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு மேலும் 234 ஓட்டங்கள் தேவையாகவுள்ளது. (ம-7,33,104)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலை ஒத்திவைக்க முற்பட்டால் வீதியில் இறங்குவோம் - சஜித்



(கொழும்பு)

தேர்தலை ஒத்திவைக்க முற்பட்டால் மக்கள் சக்தியை திரட்டி வீதியில் இறங்குவோம் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கையர்களுக்கு இத்தாலியில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இத்தாலியில் தொழில் வாய்ப்புகளுக்காக இலங்கையர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாக, எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பாரவூர்தி சாரதிகள், கட்டுமான தொழில்துறையினர், உணவக துறை, மின்சாரத்துறை மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட துறைகளில ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நாடுகள் மற்றும் இலங்கை என்பவற்றின் பணியாளர்களுக்காக 87,702 விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. (நி)

# உருளைக் கிழங்கு வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்குக்கான விசேட பண்ட வரியை 20 ரூபாவில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. (நி)

# நூல் வெளியீடும் நினைவுப் பேருரையும்

(யாழ்ப்பாணம்)

நூலாசிரியர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் "திருக் கேதீச்சர இலக்கியம்" நூல் வெளியிடும் அகில இலங்கை இந்து மாமன்ற முன்னாள் தலைவர் அமரர்.கந்தையா நீல கண்டனின் நினைவுப் பேரு ரையும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)


## கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி
## சத்துமா தயாரிப்பதற்கான உலர் உணவுகள் பெறுகைகள்-2023

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், உலர் உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ,கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/021 228 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 13.03.2023 ஆம் திகதி முதல் 23.03.2023 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. 17.03.2023 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறை முறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

8. கேள்விகள் யாவும் 23.03.2023 ஆம் திகதியன்று முற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகைக்கான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 23.03.2023 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்படல் வேண்டும்.

10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரம் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | சத்துமா தயாரிப்பதற்கான உலர் உணவு | NP/K/RDHS/Unicef/Dryfood/2023 | ரூபா.30,000.00 | 25.05.2023 | ரூபா.1,500.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**
TP- 021 228 5719, Fax- 021 228 5931 E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(C-6126)


# இராசிபலன்

10.03.2023
மாசி 26, வெள்ளிக்கிழமை
திருதியை முன்னிரவு 9.14 மணிவரை

சித்திரை முழுவதும்
சுபநேரம் -6.23-7.53 மணிவரை
இராகுகாலம்-10.53-12.23 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரட்டாதி

வளவன்




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை எளிதாகச் செய்து முடிப்பீர்கள், சுவாரஷ்யமான நாள்.




எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வாகன சுகமுண்டு.




உறவினர் நண்பர்களின் சந்திப்பால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.




பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தினர் மனம் கோணாமல் நடந்து கொள்வது நல்லது, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வழக்கமாக செய்யும் பணிகளில் மாற்றம் செய்வீர்கள், புதிய சுமைகளும் பொறுப்புக்களும் அதிகரிக்கும்.




குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பர், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புத்தி சாதுரியமான செய்றபாடுகளால் புகழ் கூடும், உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்வர்.




இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பகை ஒன்று நட்பாகலாம், செய்யும் காரியங்களில் உங்களின் திறமை மேம்படும், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.




பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் மன உழைச்சல் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.




நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், சிறப்பான பணிகளைச் செய்து குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

உழைப்பும் நேர்மையும் வெற்றி பெறச் செய்யும் பேராயுதங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் நேற்று போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை ஒரு மணி நேர வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுவதுடன் அடையாளமாக நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

.பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும், மின்சாரம், எரிபொருள், எரிவாயு பொருட்களின் விலைகளை குறை, நியாயமற்ற வரிக்கொள்கையை உடனடியாக திருத்து, சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்து, அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து, பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டகாரர்கள் மார்ச் 15 ஆம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ச்சியாக போராட்டம் இடம்பெறும் என்றனர். (4-33)



யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலையின் 'செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு-2023' நிகழ்வானது நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு-2023 நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைமைக் காரியத்தில் யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (4-6)

# இடம்பெயர்ந்த நுழைவிடங்கள் நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் கொழும்பு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்க லைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான சரத் சந்திர ஜீவவின் "இடம்பெயர்ந்த நுழைவிடங்கள்" என்னும் கவிதைத் தொகுப்புக் குறித்த அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.128, டேவிற் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் தலைமையில் நடை பெறவுள்ள இந் நிகழ்வில் நூல் குறித்த உரைகளை கவிஞரும் அரசியல் விமர்சகருமான ம.நிலாந்தன், யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. (4-6)

# கரவெட்டியில் பட்டப்பகலில் வீடு புகுந்து 36 பவுண் நகைகள் கொள்ளை

(கரணவாய்)

கரவெட்டி மத்தி சம்மந்தர் கடையடிப் பகுதியில் பட்டப்பகல் வேளை வீட்டிலில் நுழைந்த திருடர்களினால் 36 பவுண் தங்க நகை திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வீட்டில் இருந்தவர்கள் மல்லாகம் நீதிமன்றத்திற்கு காலை வேளையில் சென்றதை சாதகமாக பயன்படுத்தி வீட்டின் பின்பக்க கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 14 பவுண் நிறையுடைய தாலிக்கொடி உட்பட 36 பவுண் நிறையுடைய தங்க நகைகளை திருடி சென்றுள்ளனர்.

நீதிமன்றத்துக்கு சென்றுவிட்டு மாலை வேளை வீட்டிற்கு வந்த போதே திருட்டு இடம்பெற்றமை தெரிய வந்தது.

இச்சம்பவம் தொடர்பில் இரவு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைய நாட்களாக வடமராட்சி பகுதியில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில் பொலிஸார் மற்றும் நீதித்துறை இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (4-6-60)



இலங்கை முதலுதவிச் சங்கத்தினரால் கொடிகாமம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு மூன்று நாள் முதலுதவிப் பயிற்சி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

(படம்:-சுபேசன்)

# கலாசார மத்திய நிலையத்தில் சர்வதேச மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் மகளிர் மத்தியில் பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம் எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் சமத்துவ சிந்தனையும் சுறுசுறுப்பையும் மற்றும் சமூக மாற்றத்திற்கு பல்வேறு துறைகளில் புதிய வடிவங்களை முன்னெடுத்துச் செல்கின்ற வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு சிறந்த பெண் சாதனையாளர்கள், பதினைந்து பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பெண்களின் சமூக பொருளாதார மேம்பாட்டை முன்னிலைப்படுத்தல் எனும் கருப்பொருளை சித்தரிக்கும் சிறந்த குறும்படம் மற்றும் புகைப்படப்போட்டியில் தெரிவானவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வின் ஒரு அங்கமாக பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களின் உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் கண் காட்சியும் விற்பனைக் கூடமும் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படும் தரமான, பெறுமதியான, சத்துள்ள மற்றும் நியாயமான விலைகளில் உள்ள பொருட்களை பார்வையிட்டு கொள்வனவு செய்து பெண் தொழில் முயற்சியாளர்க்ளை ஊக்கப்படுத்த ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கண்காட்சி விற்பனைக் கூடத்திற்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-6)

# ஊரி அகழ்விற்கு பொருத்தமான இடங்கள் அடையாளம் காணும் பணி முன்னெடுப்பு

(அராலி)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முன்னாயத்த கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய வேலணை பிரதேசத்தில் ஊரி அகழ்விற்கு பொருத்தமான இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கை துறைசார் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில்வேலணை பிரதேச சபையின் உள்ளக வீதி புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்தி பணிகளுக்கு ஊரியின் தேவை காணப்பட்டபோதும் அதற்கான அனுமதி கடந்த காலங்களில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அபிவிருத்தி பணிகளுக்கு தேவையான அளவு ஊரியை அகழ்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட திணைக்களங்களான கனியவளத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், பிர தேச செயலகம், வேலணை பிரதேச சபை போன்றவற்றின் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு போன்ற பிரதேசங்களுக்கு கள விஜயம் செய்து ஊரி பெறுவதற்கு சாதகமான தன்மைகள் தொடர்பான ஆய்வுகளை மேற் கொண்டிருந்தனர்.

ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் ஊரி அகழ்விற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

2022 ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்த்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் காலத்தாமதம் ஏற்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் காலதாமதத்துடன் இடம்பெறுகின்றது.

இதனாலேயே பெறுபேறுகளை உரிய திகதியில் வெளியிட முடியாத நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அத்துடன் ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின் 2023 ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்த்தரப் பரீட்சைக்கான திகதியில் மாற்றத்தை ஏற்படுத்த நேரிடும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உயர்த்தர பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதிகரித்துள்ள போதிலும், அதிகரிக்கப்பட்ட தொகையானது பற்றாக்குறையாக காணப்படுவதாக ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர். (நி)

# தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள் சுங்கத்துறையினரால் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகளை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் எனக் கூறி இந்த பொருட்கள் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்க மத்திய சரக்கு ஆய்வுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் 68 தொலைக்காட்சிப் பெட்டிகள், 77 குளிரூட்டிகள், பயன்படுத்தப்பட்ட டயர்கள் உள்ளிட்ட உபகரணங்கள் இருந்ததாக பிரதி சுங்கப் பணிப்பாளர் ஆர்.எஸ்.வீரசிறி தெரிவித்துள்ளார். (நி)

# இந்த வருடத்தில் இதுவரை 13,739 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்தில் 13,739 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மேல் மாகாணத்தில் இருந்து அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.மேலும், டெங்கு மொத்த நோயாளிகளின் எண்ணிக்கையில் 41.2% ஆகும் என திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடையும்-ஃபிட்ச் கணிப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபா தற்போது டொலருக்கு எதிரான வலுவான நாணயமாக மாறியுள்ளது, ஆனால் வருட இறுதியில் இலங்கை ரூபாவின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடையும் என ஃபிட்ச் மதிப்பீடுகள் கணித்துள்ளது.

இதன்படி, இந்த வருட இறுதிக்குள் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 20 வீதத்தால் வீழ்ச்சியடையும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியை இலங்கை பெறும் என்ற நம்பிக்கை இருந்த போதிலும், சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் தொடர்ந்து இருக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலவீனமடைந்து வரும் பொருளாதார நிலைமைகள் மற்றும் வரவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு அது ஒரு சவாலாக இருக்கலாம்.

இந்த வருட இறுதிக்குள் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 390 ஆக குறையலாம் என ஃபிட்ச் கணித்துள்ளது.

இலங்கை இன்னும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் தேவைகளைக் கொண்டுள்ளது மற்றும் வரவிருக்கும் மாதங்களில் அதன் வெளிநாட்டு இருப்புக்களைக் கட்டியெழுப்ப வேண்டும், இது மாற்று விகிதத்தில் பாதகமான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்று ஃபிட்ச் தெரிவித்தது. (நி)

# 17 ஆம் திகதி இலங்கை வரும் உரக்கப்பல்

(கொழும்பு)

நெற்செய்கைக்கு அவசியமான ட்ரிப்பல் சுப்பர் பொசுப்பேற்று உரத்துடனான கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 36000 மெற்றிக் தொன் அடங்கிய ட்ரிப்பல் சுப்பர் பொசுப்பேற்று அடங்கிய உரக்கப்பல் வருகை தரவுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவி திட்டத்தின் கீழ் குறித்த உரத் தொகை கிடைக்கப் பெறவுள்ளதாகவும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பணமோசடி 24 பேர் கைது

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாதங்களிலும் சுமார் 173 முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்த பணம் 126 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமெனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, இவ்வாறான நபர்கள் தொடர்பில் 011 286 4241எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தகவல்களை வழங்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 200 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 130 | 150 | 120 | 160 |
| பச்சைமிளகாய் | 320 | 340 | 300 | 350 |
| தக்காளி | 80. | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 100 | 80 | 100 |
| கரட் | 100 | 180 | 140 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 150 | 170 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 550 |
| வெண்டக்காய் | 200 | 260 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 200 | 240 | 300 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 240 | 200 | 250 |
| கறிமிளகாய் | 350 | 300 | 350 | 360 |
| முருங்கைக்காய் | 1600 | 1600 | 1500 | 1800 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | 240 | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 180 | 150 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 80 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 100. |

# ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் மேலும் வலுவடைந்துள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 307 ரூபாய் 36 சதம் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மேலும், டொலர் ஒன்றின் விற்பனை விலை 325 ரூபாய் 52 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## கிருஷ்ணா அடைவு கடை

**பதிவு இல J/ DS/ BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.03.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15 ஆம் திகதி (15.04.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2023 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குறிப்பு :- 2022 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

(14834)

இல 370 கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311
021 222 5180

உரிமையாளர்,
இல 09,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5048


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 123





குந்தவை தேவிக்கு கொணர்ந்த ஓலை தவறிவிட்டது என்று அறிந்த பிறகு வந்தியத்தேவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மேலே நடந்த பேச்சுவார்த்தைகளும் அவன் காதில் சரியாக விழவில்லை; விழுந்ததும் மனத்தில் நன்கு பதியவில்லை.

'ஐயோ! இது என்ன? ஓலையைக் காணோமே? எங்கே போயிற்று? எங்கேயாவது விழுந்து விட்டதோ? சக்கரவர்த்தியின் ஓலையை எடுத்தபோது அதுவும் தவறி விழுந்திருக்குமோ? எங்கே விழுந்திருக்கும்? ஒருவேளை ஆஸ்தான மண்டபத்தில் விழுந்திருக்குமோ? அப்படியானால் சின்னப் பழுவேட்டரையரின் கையில் சிக்கிவிடுமோ? சிக்கிவிட்டால் அதிலிருந்து ஏதேனும் அபாயம் முளைக்குமோ? அடடா? என்ன பிசகு! எத்தனை பெரிய தவறுதல்! இதிலிருந்து எப்படிச் சமாளிப்பது?'

சுந்தர சோழர் வியப்புக் கடலில் மூழ்கியிருந்த புலவர் கூட்டத்தைப் பார்த்து மேலும் கூறினார்.

"நான் விளையாட்டாகச் செய்த பாடலைக் குந்தவை யாரிடமாவது சொல்லியிருக்க வேண்டும். ஒரு வேளை பழையாறை திருமேற்றளி ஆலயத்தின் ஈசான்ய பட்டாச்சாரியாரிடம் சொல்லியிருக்கலாம். அவர் இப்பாடலை நாடெங்கும் பரவும்படி செய்து என்னை உலகம் பரிகசிப்பதற்கு வழி செய்து விட்டார்!"

"பிரபு! தாங்களே பாடியிருந்தால் என்ன? பாடல் அற்புதமான பாடல் தான்! சந்தேகமே இல்லை. தாங்கள் 'புவிச் சக்கரவர்த்தி'யாயிருப்பதோடு 'கவிச் சக்கரவர்த்தி'யும் ஆவீர்கள்!" என்றார் நல்லன் சாத்தனார்.

"ஆயினும், இச்சமயம் அதே பாடலை நான் பாடியிருந்தால் இன்னொரு கொடையையும் சேர்த்திருப்பேன். இந்திரனுக்கு யானையும் சூரியனுக்குக் குதிரையும் சிவனாருக்குப் பல்லக்கும் கொடுத்ததோடு நிறுத்தியிருக்க மாட்டேன். மார்க்கண்டனுக்காக மறலியைச் சிவபெருமான் உதைத்தார் அல்லவா? அந்த உதைக்கு யமன் தப்பித்துக் கொண்டான். ஆனால் அவனுடைய எருமைக்கடா வாகனம் சிவபெருமான் கோபத்தைத் தாங்காமல் அங்கேயே விழுந்து செத்து விட்டது.

வாகனமில்லாமல் யமன் திண்டாடிக் கொண்டிருந்ததையறிந்து பழையாறைச் சுந்த்ர சோழர் யமனுக்கு எருமைக்கடா வாகனம் ஒன்றை அனுப்பினார்! இப்படி ஒரு கற்பனையும் சேர்த்திருப்பேன். அந்த எருமைக்கடாவின் பேரில் ஏறிக் கொண்டுதான் யமன் இப்போது ஜாம்ஜாம் என்று என்னைத் தேடி வந்து கொண்டிருக்கிறான்.

நமது தஞ்சைக் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரால் கூட யமதர்ம ராஜனையும் அவனுடைய எருமைக்கடா வாகனத்தையும் தடுத்து நிறுத்திவிட முடியாது அல்லவா?"

இப்படிச் சுந்தர சோழர் சொன்ன போது அவர் அருகில் வீற்றிருந்த உடைய பிராட்டி வானவன்மாதேவியின் கண்களில் நீர் அருவி பெருகிற்று. அங்கிருந்த புலவர்கள் பலர் விம்மி அழத் தொடங்கிவிட்டார்கள்.

சின்னப் பழுவேட்டரையர் மட்டுமே மனோதிடத்துடன் இருந்தார்.

"பிரபு! தங்களுடைய சேவையில் யமனுடன் போர் தொடுக்கவும் நான் சித்தமாயிருப்பேன்!" என்றார்.

"அதற்கு ஐயமில்லை, தளபதி! ஆயினும் யமனுடன் போர் தொடுக்கும் சக்தி மானிடர் யாருக்கும் இல்லை. யமனைக் கண்டு அஞ்சாமலிருக்கத்தான் நாம் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். புலவர்களே! 'நமனை அஞ்சோம்' என்று தமிழகத்தில் தவப்புதல்வர் ஒருவர் பாடினார் அல்லவா?" என்றார் சக்கரவர்த்தி.

ஒரு புலவர் எழுந்து அப்பாடலைப் பாடினார்:

"நாமார்க்கும் குடியல்லோம்

நமனை அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்படோம்

நடலையல்லோம்

ஏமாப்போம் பிணியறியோம்"

(தொடரும்:...)



# சிறுவர் அரங்கம்


## எள்ளு போச்சு! எண்ணெய் வந்தது!

(நேற்றைய தொடர்ச்சி)

உங்கள் மீது இரக்கப்பட்டு இந்த மரத்தை வெட்டாமல் விடுகிறேன். ஒவ்வோர் ஆண்டும் அறுவடை நேரத்தில் நூறு மூட்டை எள் வந்தாக வேண்டும். வரத் தவறினால் இந்த மரத்தை வெட்டுவதோடு நிற்க மாட்டேன். உங்களையும் அழித்து விடுவேன்" என்றான் அவன்.

"எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. நாங்கள் சொன்ன சொல் தவற மாட்டோம்" என்றது அந்தப் பேய்.

மகிழ்ச்சியுடன் அவனும் வீடு வந்து சேர்ந்தான்.



அறுவடைக் காலம் வந்தது. பல இடங்களில் விளைந்த எள்ளைப் பேய்கள் திருடின. எப்படியோ நூறு மூட்டை எள்ளைச் சேர்த்து அவனிடம் கொண்டு வந்தன.

பேய்களைப் பார்த்து அவன், "சொன்னபடியே எள் கொண்டு வந்து இருக்கிறீர்[illegible] என்னை ஏமாற்ற முயன்றால் நான் பொல்லாதவனாகி விடுவேன். ஆண்டு தோறும் இப்படியே வர வேண்டும்" என்று மிரட்டி அவற்றை அனுப்பி வைத்தான்.

நடுங்கியபடியே பேய்கள் அங்கிருந்து சென்றன.

[illegible] தன. புதுப்பேய் என்ற பெயருடைய பேய் தன் உறவினர்களைப் பார்க்க அங்கு வந்தது. எல்லாப் பேய்களும் இளைத்துத் துரும்பாக இருப்பதைக் கண்டது அது.

"சென்ற ஆண்டு உங்களைப் பார்த்தேன். மகிழ்ச்சியாக இருந்தீர்கள். இன்றோ மெலிந்து சோகத்துடன் காட்சி அளிக்கிறீர்கள். என்ன நடந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டது அது.

நடந்தது அனைத்தையும் சொன்னது ஒரு பேய்.

"நூறு மூட்டை எள்ளைத் தேடி அலைவதிலேயே 'எங்கள் காலம் கழிகிறது" என்று எல்லாப் பேய்களும் வருத்தத்துடன் சொல்லின.

புதுப்பேயால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "நீங்கள் இவ்வளவு முட்டாள்களா? நாம் பேய்கள் அல்லவா? நமக்குத்தான் மனிதர்கள் பயப்பட வேண்டும். நாம் அவர்களுக்குப் பயப்படலாமா?" என்று கேட்டது.

"அவன் சாதாரண மனிதன் அல்ல. எத்தனையோ பெரிய பேய்களை வீட்டில் கட்டி வைத்து இருக்கிறான். எதற்கும் அஞ்சாத முரடன். அதனால் தான் நூறு மூட்டை எள் தர ஒப்புக் கொண்டோம்" என்றது ஒரு பேய்.

"போயும் போயும் ஒரு மனிதனுக்கா அஞ்சுகிறீர்கள்? வெட்கம்! வெட்கம்! இன்றே அவனைக் கொன்று விட்டுத் திரும்புகிறேன்" என்று புறப்பட்டது புதுப்பேய்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும்.

~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# மாணவர்களுக்கான உணவு வழங்கலை ப.நோ.கூ. சங்கங்கள் பொறுப்பெடுத்தால்...

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குகின்ற திட்டம் கடந்த பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் மாணவர்களின் போசாக்கை மையப்படுத்தியதாக உணவு வழங்கும் வேலைத் திட்டம் அமைந்திருந்தது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டு அவை சமைத்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

எனினும் இத்திட்டம் போசாக்கை மையப் படுத்தியதாக மாற்றமடைந்தபோது, பாடசாலைகளுக்கு காசு விடுவிக்கப்பட்டு பாடசாலைகள் சமைத்த உணவை வழங்குகின்ற முறைமை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தத் திட்டமே தற்போதும் நடைமுறையில் உள்ளதாயினும் மாணவர்களுக்குத் தலா நூறு ரூபாய் வீதம் உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு தற்போது அது 85 ரூபாயாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொகை திருப்தியாக உள்ளபோதிலும் இஃது பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு மேலதிகமான வேலைப் பளுவைக் கொடுப்பதுடன், மாணவர்களுக்குத் தேவையான போசாக்கு நிறைந்த உண்வை வழங்குவதில் எதிர்பார்த்தளவில் திருப்தியடைய முடியாதுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

உண்மையில் பாடசாலைகளுக்கான அரச நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைகளினூடாக நிறைவேற்றப்படுகின்ற, மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அதிக நிதி விடுவிக்கப்படுகிறது.

அதேநேரம் அந்த வேலைத்திட்டம் அதிபர், ஆசிரியர்களுக்கு சுமையாக அமையும் போது அது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் வேலைத் திட்டத்தில் நம் பகுதிகளில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்தினால் என்ன? என்ற கருத்தியல் எழுவதில் நியாயமுண்டு.

ஆம், தற்போது நம் மண்ணில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தொழிற்பாடு என்பது மந்தமாகவே உள்ளது.

ஒரு காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சேவை என்பது மிகவும் உன்னதமாக இருந்தது.

எனினும் காலசூழல்கள் அவற்றின் செயற்திறனைப் பாதித்துள்ளன.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னெடுக்கும்போது அவற்றின் மீதான மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறல் என்பன திருப்தியாக இருப்பதுடன் அம்மாச்சி உணவகம் போன்ற புதிய சிந்தனைகளின் கீழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் வழிப்படுத்துவதாக அமையும்.

ஆகையால் இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் சீர்தூக்கி ஆராய்வது பயன்மிக்கதாக அமையும்.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி வவுனியாவில் கைது

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா நேற்று வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மை நிலையினை வலியுறுத்துமாறு கோரி போராட்டம் மேற்கொண்டுவரும் கொட்டகைக்கு சட்டவிரோதமாக மின்சாரத்தினை பெற்றனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

"நாம் கடந்த 2,210 நாட்களாக குறித்த கொட்டகையிலேயே போராடி வருகின்றோம். அந்த கொட்டகைப் பகுதியில் இருந்த மின்சாரத் தூணில் வீதி மின்விளக்கு ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

எமக்கான மின்சாரம் மின்சார சபையால் வழங்கப்பட்டிருந்தது. வடமாகாண சபை செயற்பாட்டில் இருக்கும்போதே வழங்கப்பட்டிருந்தது. அதில் பழுதுகள் ஏற்பட்டபோதும் கூட இலங்கை மின்சார சபையினை சேர்ந்தவர்கள் வருகைதந்து அதனை சீரமைத்தும் தந்திருந்தனர்.

இந்நிலையிலேயே எமது சங்கத்தின் தலைவி தற்போது கைது செய்துள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் சட்டவிரோதமாக மின்சாரத்தை பெறவில்லை.

எமது போராட்டத்தினை திசைதிருப்புவதற்காகவே இவ்வாறான சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் காசிப்பிள்ளை ஜெயவனிதா, முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனாவின் தேர்தல் பிரசார துண்டுபிரசுரத்தில் தனது மகள் உள்ளதாக கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-7,250)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் நேற்றைய தினம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை ஒரு மணிநேர வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டதுடன் அடையாளமாக நண்பகல் 12மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஊழியர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும், மின்சாரம் எரிபொருள் எரிவாயு பொருட்களின் விலைகளை குறை, நியாயமற்ற வரிக் கொள்கையை உடனடியாக திருத்து, சம்பள முரண்பாட்டினை தீர்க்கும் குழுவின் அறிக்கையினை உடனடியாக நடைமுறைப்படுத்து, அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீளவும் திறந்து கல்வி உரிமையை உறுதிப்படுத்து, பல்கலைக்கழக விவகாரங்களில் கல்வி அமைச்சரின் மௌனம் ஏன் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்திருந்த போராட்டகாரர்கள் மார்ச் 15ம் திகதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் போராட்டம் இடம்பெறும் என்றனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** 56 ஆம் பயிற்சி இராணுவ முகாம் கனகராயங்குளம் ஆலங்குளம், குஞ்சுக்குளம், மன்னாங்குளம், முதிரங்குளம், பெரியகுளம் - 561 பிரிகேட் இராணுவ முகாம், பெரியகுளம் -சேவாலங்கா, பெற்றோல் எரிபொருள் நிரப்பு நிலையத்தடி கனகராயங்குளம், விசேட அதிரடிப் படை இராணுவ முகாம் மாங்குளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** [illegible] பைகுளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி, மன்னார், Bus stand, கொன்வென்ட் வீதி, Jimbrown Nagar-Mannar, மன்னார் நகரம், மன்னார் நகரம் இலங்கை மின்சார சபையடி, மூர் வீதி, நளவன் பாடி புதுத்தெரு (பள்ளி முனை), இளையோர் சேவை மையத்தடி ஒல்லி மோட்டை, பள்ளிமுனை, மன்னார் ஸ்ரீலங்கா டெலிகாம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி மைதானம், மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

# திருவள்ளுவர் சிலை யாழ். வந்தடைந்தது

யாழ். பண்ணை சுற்றுவட்டத்தில் நிர்மானிப்பதற்காக தமிழகத்திலிருந்து திருவள்ளுவர் சிலை யாழ். வந்தடைந்தது.

யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணனின் தூய அழகிய மாநகரம் எனும் துரித அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட பண்ணை சுற்றுவட்டத்தின் நிர்மாணப் பணிகள் தனியார் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது.

குறித்த சுற்று வட்டத்தின் நடுப்பகுதியில் வைப்பதற்கான திருவள்ளுவர் சிலை இந்தியாவின் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மிக விரைவில் இந்த பணிகள் பூர்த்தியடைந்து குறித்த சுற்றுவட்டம் திறந்து வைக்கப்பட்டு திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-7,104)

# 16 கிலோ கஞ்சா எழுதுமட்டுவாழில் மீட்பு

அரச புலனாய்வுப் பிரிவின் இரகசியத் தகவலுக்கு அமைவாக எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 16கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கு அமைவாக கொடிகாமப் பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இருப்பினும் சந்தேக நபர்கள் கஞ்சாவை கைவிட்டு விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் சம்பவ இடத்திலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

# இலங்கைக்கு 6.6 மில்லியன் கடன் வழங்கும் ஜப்பான்

அவசரகால உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவிக்காக இலங்கைக்கு மேலதிகமாக 6.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஜப்பான் வழங்குகின்றது.

ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு மிகமுக்கியமான உணவு மற்றும் ஊட்டச்சத்து உதவியை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு (WFP) மேலும் 6.6 மில்லியன் அமெரிக்க டொலர்களையே இவ்வாறு ஜப்பான் வழங்குகின்றது.

இந்த நிதியுதவியின் மூலம் WFP குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் அடங்கிய உணவுப் பொதிகளை வழங்கி, அவர்களின் மாதாந்த உணவுத் தேவைகளில் பாதியை இரண்டு மாதங்களுக்குப் பூர்த்தி செய்ய முடியும்.

மேலும் இந்த நன்கொடையானது நான்கு மாதகாலத்திற்கு சோளம் மற்றும் சோயா பீன்ஸ் கொள்வனவு செய்வதன் மூலம் திரிபோஷா போன்ற வலுவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும், இதனால் ஊட்டச்சத்து குறைபாட்டால் அதிகளவு பாதிக்கப்படும் கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் சிறுகுழந்தைகள் பயன்பெறுவர் என ஜப்பானிய தூதுவர் மிகொசி ஹிதேகி தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியம்பொக்கணை

# நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப்பொங்கல்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப்பொங்கல் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பொங்கல் உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

துறை சார்ந்த திணைக்களங்கள் உற்சவகால தொண்டர்கள், உபயகாரர்கள் மற்றும் பரிபாலன சபையினர், தர்மகர்த்தாக்கள் ஆகியோரை கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கியுதவுமாறு ஆலய நிர்வாகத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (4-6-315)

# குளத்தின் நீர் மட்டத்தினை அதிகரிக்க வேலைத் திட்டம்

(அக்கராயன்)

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் மட்டத்தை அதிகரிக்கும் செயற்பாட்டில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

கரியாலை நாகபடுவான் குளத்தில் தற்போது ஐந்து அடி வரையான நீர் மட்டமே காணப்படும் நிலையில் சிறுபோக நெற்செய்கை உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படும் நிலையில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் முடக்கன் ஆறு, மண்டைக்கல்லாறு வழியாக கடலைச் சென்றடையும் நீரினை தேவன் குளம், பன்றி வெட்டிக் குளம் ஊடாக கரியாலை நாகபடுவான் குளத்திற்கு செல்லும் வகையில் நீர்த் தடுப்பணைகளை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தனர். (4-6-350)

# கசிப்புடன் கைதானவருக்கு 23 ஆயிரம் அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சியில் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்திய போது அவருக்கு 23 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (4-6-315)

# வரி, காப்புறுதி பத்திரம் இன்றி பயணித்தவர் கைது

(கண்டாவளை)

கிளிநொச்சி பளைப் பகுதியில் வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காப்புறுதிப்பத்திரம் மற்றும் வரிப் பத்திரம் என்பன இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை கைது செய்த பளைப் பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர் குறித்த குற்றச்சாட்டுக்கு பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# மது போதையில் சாரத்தியம் கைதானவர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

கிளிநொச்சி பளை பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பளைப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச் சென்ற ஒருவரை கைது செய்த பளை பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதையடுத்து குறித்த நபரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (4-6-315)

ஆலயம் இடிக்கப்பட்டு மாளிகை அமைப்பு

# அரச பயங்கரவாதத்தின் கொடூர முகம் மீண்டும் அம்பலம்

## அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டமை இனவாதத்தையே காட்டி நிற்கின்றது என மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வலி வடக்கு பிரதேச போர்த்துக்கீசர் கால மிகத் தொன்மை வாய்ந்த கீரிமலை சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது. இது இனவாத, மதவாத அரச பயங்கரவாதத்தினதும் அதற்கு துணை நிற்கும் இயந்திரமான இராணுவத்தினதும் கொடூர முகத்தை மீண்டும் உறுதி செய்துள்ளது.

அரசு இந்து மக்களிடத்தும், தமிழ் மக்களிடத்தும் இச்செயல் தொடர்பாக மன்னிப்பு கோருவதோடு அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை முற்றாக அங்கிருந்து அகற்றி அங்கு இந்து மக்களின் சுதந்திர வழிபாட்டுக்கும் இடம் அளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றது.

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசம் என்பது பாதுகாப்பான பிரதேசம் என்று பொருள்படும். அத்தகைய பிரதேசத்தில் பயங்கரவாத செயலுக்கு இடம் உண்டா? இராணுவ தேவைக்கு அப்பால் கட்டடம் நிர்மாணிக்கப்படுமாயின் அதற்கு அனுமதி அளித்தது யார்? அத்தகைய கட்டடம் அமைக்க தொன்மை வாய்ந்த இந்து ஆலயத்தினை அழிப்பதற்கு அனுமதி அளித்தது யார்? தொல்லியல் திணைக்களம் அனுமதி அளித்ததா? எத்தகைய அனுமதியும் இல்லாத கட்டடம் அமைக்கப்பட்டு தொன்மை வாய்ந்த ஆலயம் அழிக்கப்பட்டிருப்பின் அவ்வாறு செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? நிறுத்தப்பட்டாலும் நீதி கிடைக்குமா? என்பதே எம்மை சூழ்ந்துள்ள கேள்விகள் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-299)

# காட்டு யானைகளின் வருகையால் பயன்தரு மரங்கள் நாசம்



(முறிகண்டி)

காட்டு யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் சொத்தழிவுகளிலிருந்து காப்பாற்றுங்கள் என பிரமந்தனாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு பகுதிக்குள் இரவு நுழைந்த காட்டு யானைகள் பயன்தரும் தென்னை மரங்களை அழித்து சேதப்படுத்தியுள்ளன.

இதன் காரணமாக குறித்த பகுதி விவசாயிகள் பெறுமதிமிக்க சொத்துக்களை இழப்பதுடன், பொருளாதாரமும் பாதிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதிக்குள் சென்ற காட்டு யானைகள் ஒரு வரது காணியில் சுமார் 14 தென்னை மரங்களிற்கு மேல் சேதப்படுத்தி உணவாக்கிக் கொண்டுள்ளது. இந்த நிலையில் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து குறித்த காட்டு யானைகளை துரத்தியுள்ளனர்.

குறித்த யானைகள் மக்கள் குடியிருப்புக்களிற்குள் நுழையாத வகையில் யானை வேலிகளை அமைத்த தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-6-100-316)

# இரணைமடுக் குளத்தின் கீழ் 12 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக செய்கை மேற்கொள்வதென நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்டத்தின் சுமார் 36 அடி நீர் கொள்ளளவை கொண்ட பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தில் தற்போது 30 அடி 2 அங்குல தண்ணீர் மாத்திரமே உள்ளது

இதில் குளத்தின் பாதுகாப்பு துருசீர் விநியோகம் ஆவியாதல் என்பவை தவிர 59 ஆயிரம் ஏக்கர் கன அடி தண்ணீரை மாத்திரமே விவசாயத்திற்கு பயன்படுத்தமுடியும் என்பதால் குறித்த நீர் கொள்ளளவை வைத்து இவ்வாண்டு ஏறத்தாள 11 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கையும் 1500 ஏக்கர் மேட்டுநிலச் செய்கையும் மேற்கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

மேற்படி தீர்மானம் எடுப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று கிளிநொச்சி கோவிந்தன் கடை சந்தியில் அமைந்துள்ள திட்ட முகாமைத்துவகுழு அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. (4-6-315-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலாவரையில்...

செய்தபோது எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## 7 பொருட்களின்...

ரூ.218 ஆகவும், உள்ளூர் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோகிராம் ரூ.9 குறைக்கப்பட்டு ரூ.155 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் 6 ரூபாயினால் குறைக்கப்பட்டு 129 ரூபாயாகவும், சிவப்பு பருப்பு கிலோகிராம் 19 ரூபாயினால் குறைக்கப்பட்டு 339 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படும்.

மேலும், ஒரு கிலோகிராம் கோதுமை மாவு 15 ரூபாயினால் குறைக்கப்பட்டு 230 ரூபாயாகவும் உள்ளூர் வெள்ளை அரிசி கிலோகிராம் 7 ரூபாயினால் குறைக்கப்பட்டு 188 ரூபாயாகவும் செத்தல் மிளகாய் ஒரு கிலோகிராம் 75 ரூபாயினால் குறைக்கப்பட்டு ரூ.1,500. ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## 18 பவுண்...

தாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் அல்வாய் வடக்கு, வைரவர் கோயிலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தவர்கள் அயலில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றதை சாதகமாக பயன்படுத்தி வீட்டின் பின் கதவை உடைத்து சென்ற திருடர்கள் அங்கிருந்த தாலிக்கொடி, மோதிரம் சங்கிலி, காப்பு உட்பட 18 பவுண் தங்க நகைகளையும் பெறுமதியான தொலைபேசி ஒன்றினையும் திருடிச் சென்றுள்ளனர். (ம-7,60)

## நாடளாவிய ரீதி...

னெடுக்க தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை இந்த தொடர் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை குறித்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல சேவைகள் ஸ்தம்பிப்பதால் நாடு முடங்கும் சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தேர்தலுக்கு நிதி...

காணப்படும் சவால்கள் தொடர்பிலேயே கூறுகின்றோம் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

தேர்தல் வேண்டாம் என்று நிதி அமைச்சோ, திறைசேரியோ தீர்மானிக்கவில்லை. தற்போதைய சவால்கள் தொடர்பில் ஆராய்ந்தே கதைக்கின்றோம்.

வருமானத்திற்கும் செலவுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. வருமானத்தை விடவும் செலவு அதிகமாகவே உள்ளன.

நிதி அமைச்சின் செயலாளர் தேர்தலை நடத்தாது இருப்பதற்காக பணத்தை வழங்காமல் இருப்பதாக குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

அவர் நிதியை வழங்க முடியாது என்று கூறவில்லை. இருக்கும் செலவுகளை சுட்டிக்காட்டியுள்ளார். வருமானத்திற்கும் செலவுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளார்.

சவால்களையே அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஒருபோதும் நிதியை வழங்க முடியாது என கூறவே இல்லை. ஏற்கெனவே ஒருதொகை நிதி தேர்தலுக்காக வழங்கப்பட்டுள்ளது.

இதனை வேறு கோணத்தில் இருந்து பார்க்க வேண்டாம் என கேட்கின்றோம் என்றார். (ம-7)

## இரு பிள்ளை...

யில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் உயிரிழந்த சம்பவத்தில் குழந்தைகள் இருவரும் கயிற்றால் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என உடற்கூற்று அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா - குட்செட் வீதியிலுள்ள வீட்டிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் இரு நாட்களுக்கு முன் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

42 வயதான தந்தை, 36 வயதான தாய், 9 மற்றும் 3 வயதான சிறுமிகளின் சடலங்களிலிருந்து மாதிரிகள் பெறப்பட்டுள்ளதுடன், அவற்றை இரசாயன பகுப்பாய்விற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்முடிவில் இரு பிள்ளைகளும் கயிற்றினால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

தந்தை தூக்கில் தொங்கியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறார்.

தந்தையின் சடலத்தில் வேறு எந்த தடயங்களோ காயங்களோ இல்லாத காரணத்தால் அவரது இறப்பு தூக்கில் தொங்கியதால் ஏற்பட்டது என உடற்கூற்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இரு குழந்தைகளினதும் தாயாரான வரதராயினியின் இறப்புக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. அவரதும் கணவரான கௌசிகனதும் உடல் உறுப்பு மாதிரிகளும் குருதி மற்றும் சிறுநீரக மாதிரிகளும் மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அரசபகுப்பாய்வுத் திணைக்களத்திடம் இருந்து முழுமையான அறிக்கை கிடைத்த பின்பே இது தொடர்பில் சட்டமருத்துவ அதிகாரியினால் உறுதியான முடிவுக்கு வரமுடியும்.

சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன. (ம-7)

## யாழ்...

உள்ளூராட்சி சபைகள் மார்ச் 19ஆம் திகதி கலைக்கப்பட்டால், அதுவரை புதிய முதல்வர் பதவியில் இருப்பார். (ம-7,33)

## தலைமைத்துவம்...

புதிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எனது ஆட்சிக் காலத்தில் ஆகக் கூடியது நூற்றுக்கு ஒரு சதவீத வட்டி அடிப்படையில் மாத்திரமே கடன் பெறப்பட்டது. ஆனால் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் சீனாவிடமிருந்து 9 சதவீத வட்டிக்கு கடன் பெறப்பட்டது.

மோசடி செய்வதற்காகவே அவர்கள் இவ்வாறு கடன் பெற்றனர். இவ்வாறு இவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை செலுத்த முடியாமல் இன்று நாம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றோம்.

இறுதியில் அரசாங்கமே தம்மை வங்குரோத்தடைந்த நாடாக பிரகடனப்படுத்தியுள்ளது. உலகில் தாம் வங்குரோத்தடைந்துள்ளதாக அறிவித்துள்ள மிகக்குறைவான நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாக இடம்பிடித்துள்ளது.

இந்த வீழ்ச்சியை முற்றாக சரி செய்வதற்கு 25 - 30 ஆண்டுகளாவது செல்லும். எனவே குறைந்தபட்சம் இப்போதிருந்தாவது நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 09/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1509
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 6 2 5 7 7 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1084
Z 11 51 74 80

கொவிசெத
திகதி 2023.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 3296
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
U 02 06 39 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1402
P 16 29 41 55 61

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.09
சீட்டிழுப்பு இலக்கம் 363
விருச்சிகம் 25 27 46 50 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/09
சீட்டிழுப்பு இலக்கம் 5054
Q 2 2 2 3 6 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2029
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.03.09
தினம் வியாழக்கிழமை
Y 25 44 64 76
ரூ. 3,814,880/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.09
சீட்டிழுப்பு இல : 4190
ரூ. 4,268,400/-
34 36 50 66 M
DLB

ராசி
ரூ. 2,212,454/-
திகதி 2023-03-09
வெற்றி வாரம் 3741
18 34 40 56
ரூ. 10,476,320/-
DLB

X 28 09 19 47 77
1295
2023.03.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 312,010,236.20
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
577 2023-03-09
H 03 21 45 02
ரூ. 17,831,064/-
DLB
www.dlb.lk

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1855
ரூ. 5,091,640/-
சத கோடிபதி
06 32 70 72 A
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## இறுதிக் கருத்தரங்கு 2023

25 மார்ச்

ஆசிரியர் போட்டிப் பரீட்சை

பிரதி - சனி, ஞாயிறு 9.00 AM - 2.00 PM

T.தவசேகர் P.கமல்தாசன்

மற்றும் துறைசார் வளவாளர்கள்

A.சுபாகரன் A.பாலா

நான்கு வகுப்புக்களுக்கான கட்டணம் 2000/=

| | |
|---|---|
| பட்டப்படிப்பு கல்லூரி | 076 688 3394 |
| ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம் | 077 526 5344 |

(14847)



## திருமண தரகர் தேவை

விஸ்வகுல திருமண தரகர் தேவை

தொடர்புக்கு :-

**077 867 9701**

(14844)



## IELTS

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)

Academic or General

**IELTS Life Skills - A1**

திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

**DIPLOMA IN ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம் 11/3/2023 SAT 9 am 3 pm

**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch

French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-6113)

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |


## கடன் சீரமைப்பு ஏப்ரல் மாதம் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு முறை குறித்து ஏப்ரல் மாதத்துக்குள் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வர்த்தகக் கடன் வழங்குபவர்களுடன் பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்தவுள்ளதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள நிதிப் பொதி குறித்த முதலாவது மீளாய்வு 6 மாதங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் அதற்கு முன்னர் இது தொடர்பான கலந்துரையாடல்கள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார். (ம-7)


## இப்பொழுது விற்பனையில்

"வித்யாகீர்த்தி" ஜனாதிபதி விருது பெற்ற

ந. சந்திரகுமார் (SLPS)

ஆசிரியரின் தொகுப்பில்

## கல்விசார் பொதுஅறிவு

போட்டிப்பரீட்சை வழிகாட்டி நூல்




Published By :

**UNILANKA'S PUBLICATION & BOOK DEPOT**

No. 326, Sea Street, Colombo - 11. Hotline : 0776258778 / 0777220324

யாழ் நகரில்
பூபாலசிங்கம் புத்தகசாலை, குயின்சி புத்தகசாலை (KKS Road)

சுன்னாகம்
சித்திவிநாயகர் புத்தகசாலை

நெல்லியடி
சிதம்பரபிள்ளை புத்தகசாலை

கிளிநொச்சி
வருணா புத்தகசாலை

வவுனியா
JPK Centre

மன்னார்
ஜோதி புத்தகசாலை

பாடநூல் வெளியீட்டாளர்கள், அனைத்து வெளியீட்டாளர்களின் புத்தகங்களின் மொத்த விற்பனையாளர்கள்... (C-6131)



## பணியாளர்கள் தேவை

கம்பனி முகவர் நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள், கணக்காளர் ஆண் / பெண் பணியாளர்கள் ஆண் / பெண் முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் **076 315 6470**

(C-6128)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 82 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14837)

**074 318 7263 | 076 755 8606 | 076 436 5814**


## இருபதாம் ஆண்டு நினைவு



தோற்றம் 30 . 01 . 1939

மறைவு 19 . 02 . 2003

திதி : 10.03.2023

அமரர்

### கார்த்திகேசு சந்திரராசா (SLAS)

(ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர் வலி மேற்கு - சங்கானை.
முன்னாள் திட்டப் பணிப்பாளர் (UNHCR)

இருபது ஆண்டுகளாய் இருண்டே
கிடக்குதப்பா எம் இதயம்
இவ்வுலகில் நீங்கள் இன்றி
இறுகிய நெஞ்சுடனே நாமெல்லாம்
இன்னலுடன் நும் நினைவில்
வாழ்கின்றோம் உம் வழியில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
- குடும்பத்தினர்

பறாளாய் வீதி, சுழிபுரம். (14840)

## கண்ணீர் அஞ்சலி

### திரு. சங்கரப்பிள்ளை செல்லத்துரை

(முன்னாள் தலைவர், தேசிய வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு)



மலர்வு : 14.12.1933 உதிர்வு : 08.03.2023

அன்னாரது மறைவு தமிழ்க் கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயர்பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசிய வெளிக்கள நிலையத்தினர், தொண்டைமானாறு.
இல. 133, செம்மணி வீதி, நல்லூர்.

(C-6133)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.